# கோவிட் – 19/COVID-19

## வாடகைக் குடியிருப்பாளர்களுக்கான புதிய செய்தி

Toronto Community Housing

**மார்ச்சு 19, 2020**

---

**TCHC வீட்டுவாரியச் சமூகத்தில் தூரநின்று பழகுவதற்கான நடைமுறைகள்**

மக்களைப் பாதுகாக்கவும் கோவிட்-19 கிருமி பரவும் வேகத்தைக் குறைக்கவும் வேண்டும் என்ற நோக்கத்துடன், ரொறொன்ரோ சமூக வீட்டு வாரியம் தூரநின்று பழகுவதற்கான நடைமுறைகள் பலவற்றை செயல்பாட்டில் கொண்டு வந்து உள்ளது.

- எமது காரியாலயங்கள் திறந்து உள்ளன. ஆனால் விரும்பும் நேரம் உள்வருவதற்கான அனுமதி மேலதிக அறிவித்தல் வரையில் தடைசெய்யப்பட்டு உள்ளது. எமது பணியாளர்கள் வாடகைக் குடியிருப்பாளர்களுடன் சந்திப்புக்கான முன்னேற்பாடு செய்து அதன்படி சந்திப்பர்.
- சமூகத்தினர் ஒன்றுகூடும் அறைகள், ஓய்வு நேரச் செயற்பாட்டு அறைகள் மற்றும் பொதுவசதி அறைகள் சமூகரீதியாகக் கூடுவதற்கு மூடப்பட்டு உள்ளன. முகவர் அமைப்புகளின் ஊடாக வழங்கப்படும் உணவுத் திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வரும்.
- ஆடைச் சலவை அறைகள் திறந்து இருப்பதுடன் ஒரு நாளில் பல தடவைகள் அவை சுத்தம் செய்யப்படும்.
- அவசரகால நிலைமையில் உள்ள திருத்த வேலைகளைத் தொடர்ந்து நாம் வழங்குகிறோம். ஆனால் மற்றைய வகையான வேண்டுகோள்கள் பிந்திய ஒரு நாளில் நிறைவேற்றப்படும்.
- மேல் அறிவித்தல் உள்ளவரையில் குடியிருப்பு அலகின் உட்புற மூலதனச் சீரமைப்பு வேலை (capital work) இடைநிறுத்தப்பட்டு உள்ளது. தீ உயிர்ப் பாதுகாப்பு கருவிக்கான திருத்த வேலைகள் மற்றும் ஜன்னலில் பொருத்தும் காற்றுப் பதனீட்டுக் கருவி மாற்றீடுகள், இதற்கு விதிவிலக்காக அமையும். இவ்வேலையைச் செய்யும் விற்பனையாளர்கள் உங்களின் பாதுகாப்புக் கருதி, சொந்த முறையிலான பாதுகாப்புக் கவசங்களை அணிந்து கொள்ளுவர்.

**எனது வீட்டு வாடகை அல்லது வேறு ஏதாவது விடயம் பற்றி பணியாளர்களுடன் நான் தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?**

நீங்கள் தொலைபேசி வழியாகச் சேவையைப் பெறலாம் அல்லது எமது 24-மணிநேர சேவைபெறுநர் பராமரிப்பு நிலையத்தின் **416-981-5500** தொலைபேசி இலக்கத்தை அல்லது help@torontohousing.ca. மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி நேரடியான ஒரு சந்திப்பினை ஏற்பாடு செய்யலாம்.

**பாதுகாப்பு மற்றும் காவல்நிலை எப்படியாக இருக்கும்?**

எமது சமூகப் பாதுகாப்புப் பிரிவினை சேர்ந்த விசேட காவல் அதிகாரிகள் இப்பொழுதும் குடியிருப்புச் சமூகத்தின் மத்தியில் கடமை புரிந்து வருகின்றனர். மேலும் **416-921-2323** தொலைபேசி இலக்க இடத்தில் இருந்து CSU அதிகாரிகளை அனுப்பும் சேவை தொடர்ந்து நடைபெறுகிறது.

**கிருமித் தொற்றில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதல்**

கிருமிகளின் தொற்று நிகழ்வதைத் தடுப்பதற்காக சவர்க்காரம் மற்றும் தண்ணீர் கொண்டு உங்கள் கைகளை குறைந்த பட்சம் 15 வினாடிகளுக்காவது கழுவுதல், கைச்சுத்த இரசாயனப் பொருளினை உபயோகிக்கும் அளவுக்கு நல்ல பலனைத் தருகிறது. மாநகரம் அடங்கிலும் இப்பொருளுக்கான தட்டுப்பாடு நிலவி வருகிறது.

மேலதிக தகவல் அறிவதற்கு இங்கு சென்று பாருங்கள்: torontohousing.ca/coronavirus அல்லது toronto.ca/covid-19.

இந்த அறிவித்தலை வேறொரு மொழியில் அல்லது வடிவத்தில் பெறுவதற்கு அழையுங்கள்:

**416-981-5500**